# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1588/26 - 2009 පෙබරවාරි 13 වැනි සිකුරාදා - 2009.02.13

*1588/26 ஆம் இலக்கம் - 2009 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### *1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபைச் சட்டம்*

*84 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 84 ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அனைத்து நீர் வழங்கல் திட்டங்களினூடாகவும் நீர் வழங்கப்பெறும் நீர்ப் பாவனையாளர்களிடமிருந்து 2009, பெப்புருவரி 15 ஆந் திகதி முதல் செயற்படும் வண்ணம் கீழ்க்காணும் வகையில் கட்டணம் அறவிடப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகிறது.*

*1380/12 ஆம் இலக்க, 2005, பெப்புருவரி 15 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் கீழ் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் நீர் வழங்கப்பெறும் அனைத்துப் பாவனையாளர்களிடமிருந்தும் அறவிடப்படும் நீர்க் கட்டணத்திற்குப் பதிலாக 2009, பெப்புருவரி 15 ஆந் திகதி முதல் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நீர்க் கட்டணம் நடைமுறைப்படுத்தப்படும்.*

எஸ். சீ. அமரசிங்க,
தலைவர்.

தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை,
இரத்மலானை,
2009, பெப்புருவரி 5.

**கட்டண விதிப்பு - 1**

***வீட்டுப் பாவணை - சமுர்த்தி பெறுநர்கள்***

(i) இக்கட்டணமானது சமுர்த்தி பெறுநர்களது வீட்டுத் தேவைக்கான நீர் வழங்கலுக்கு ஏற்புடையதாகும்.

(ii) இக்கட்டணத்தின் கீழ் நீர் வழங்கலுக்கான மாதாந்தக் கட்டணம் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறாகும் :-

| அலகுகள் | பாவனைக் கட்டணம் அலகு ரூபா | மாதாந்த சேவைக் கட்டணம் ரூபா |
|---|---|---|
| 00 - 05 | 1.25 | 50.00 |
| 06 - 10 | 1.50 | 50.00 |
| 11 - 15 | 3.00 | 50.00 |
| 16 - 20 | 30.00 | 80.00 |
| 21 - 25 | 50.00 | 100.00 |
| 26 - 30 | 75.00 | 200.00 |
| 31 - 40 | 90.00 | 400.00 |
| 41 - 50 | 105.00 | 650.00 |
| 51 - 75 | 110.00 | 1,000.00 |
| 75இற்கு மேல் | 120.00 | 1,600.00 |

**கட்டண விதிப்பு - 2**

**வீட்டுப் பாவனை - சமுர்த்தி பெறுநர்களல்லாத ஏனையோர்**

(i) இக்கட்டணமானது சமுர்த்தி பெறுநர்களல்லாத ஏனையோரின் வீட்டுத் தேவைக்கான நீர் வழங்கலுக்கு ஏற்புடையதாகும்.

(ii) இக்கட்டணத்தின் கீழ் நீர் வழங்கலுக்கான மாதாந்தக் கட்டணம் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறாகும்:-

| அலகுகள் | பாவனைக் கட்டணம் அலகு ரூபா ச. | மாதாந்த சேவைக் கட்டணம் ரூபா ச. |
|---|---|---|
| 00 - 05 | 3.00 | 50.00 |
| 06 - 10 | 7.00 | 65.00 |
| 11 - 15 | 15.00 | 70.00 |
| 16 - 20 | 30.00 | 80.00 |
| 21 - 25 | 50.00 | 100.00 |
| 26 - 30 | 75.00 | 200.00 |
| 31 - 40 | 90.00 | 400.00 |
| 41 - 50 | 105.00 | 650.00 |
| 51 - 75 | 110.00 | 1,000.00 |
| 75இற்கு மேல் | 120.00 | 1,600.00 |

**கட்டண விதிப்பு - 3**

**நிலையான பொதுக் குழாய்கள், பூந்தோட்டக் குழாய்கள்**

(i) இக்கட்டணமானது நிலையான பொதுக் குழாய்கள், பூந்தோட்டக் குழாய்களுடான நீர் வழங்கலுக்கு ஏற்புடையதாகும்.

(ii) இக்கட்டணத்தின் கீழ் நீர் வழங்கலுக்கான மாதாந்தக் கட்டணம் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறாகும்:-

| அலகுகள் | பாவனைக் கட்டணம் அலகு ரூபா ச. | மாதாந்த சேவைக் கட்டணம் ரூபா ச. |
|---|---|---|
| 00 - 25 | 10.00 | 250.00 |
| 26 - 50 | 10.00 | 500.00 |
| 51 - 100 | 10.00 | 1,000.00 |
| 101- 200 | 10.00 | 1,600.00 |
| 201- 500 | 10.00 | 2,500.00 |

**கட்டண விதிப்பு - 4**

**பாடசாலைகள் மற்றும் மத வழிபாட்டு நிலையங்கள்**

(i) இக்கட்டணமானது அரசாங்க பாடசாலைகள் மற்றும் அரச உதவிபெறும் பாடசாலைகள், மத வழிபாட்டு நிலையங்கள் மற்றும் அரசாங்க அனுமதிபெற்ற தர்ம ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் தேவைக்கான நீர் வழங்கலுக்கு ஏற்புடையதாகும்.

(ii) இக்கட்டணத்தின் கீழ் நீர் வழங்கலுக்கான மாதாந்தக் கட்டணம் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறாகும்:-

| அலகுகள் | பாவனைக் கட்டணம் அலகு ரூபா ச. | மாதாந்த சேவைக் கட்டணம் ரூபா ச. |
|---|---|---|
| 00 - 05 | 6.00 | 50.00 |
| 06 - 10 | 6.00 | 65.00 |
| 11 - 15 | 6.00 | 70.00 |
| 16 - 20 | 6.00 | 80.00 |
| 21 - 25 | 6.00 | 100.00 |
| 26 - 30 | 6.00 | 200.00 |
| 31 - 40 | 6.00 | 400.00 |
| 41 - 50 | 16.00 | 650.00 |
| 51 - 75 | 16.00 | 1,000.00 |
| 75 இற்கு மேல் | 16.00 | 1,600.00 |

### கட்டண விதிப்பு - 5

### வர்த்தக பாவனையாளர்

(i) இக்கட்டணமானது வர்த்தக நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், உல்லாசப் பயணிகள் ஹோட்டல்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள் ஆகியவற்றின் தேவைக்கான நீர் வழங்கலுக்கு ஏற்புடையதாகும்.

(ii) இக்கட்டணத்தின் கீழ் நீர் வழங்கலுக்கான மாதாந்தக் கட்டணம் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறாகும்.

| அலகுகள் | பாவனைக் கட்டணம் அலகு ரூபா ச. | மாதாந்த சேவைக் கட்டணம் ரூபா ச. |
|---|---|---|
| 00 - 25 | 65.00 | 250.00 |
| 26 - 50 | 65.00 | 500.00 |
| 51 - 75 | 65.00 | 1,000.00 |
| 76 - 100 | 65.00 | 1,000.00 |
| 101 - 200 | 65.00 | 1,600.00 |
| 201 - 500 | 65.00 | 2,500.00 |
| 501 - 1000 | 65.00 | 4,000.00 |
| 1001 - 2000 | 65.00 | 7,500.00 |
| 2001 - 4000 | 65.00 | 12,500.00 |
| 4001 - 1000 | 65.00 | 25,000.00 |
| 10001 - 20000 | 65.00 | 50,000.00 |
| 20000க்கு மேல் | 65.00 | 100,000.00 |

### கட்டண விதிப்பு - 6

### பவுசர் மூலம் நீர் விநியோகம்

(i) பவுசர் வாகனம் மூலமான நீர் வழங்கலுக்கு ஒரு அலகுக்கு ரூபா 65.00 வீதம் கட்டணம் விதிக்கப்படும்.

(ii) இக்கட்டணத்தில் கீழ் நீர் வழங்கலின் போதான போக்குவரத்து செலவு மற்றும் மேலதிகச் செலவுகள் அடங்காது. இவற்றை உண்மையான செலவின் அடிப்படையில் அறவிடலாம்.

### கட்டண விதிப்பு - 7

### கைத்தொழில்

(i) இக்கட்டணமானது கைத்தொழில்கள், அரச நிறுவனங்கள் மற்றும் முதலீட்டுச் சபையின் ஏற்றுமதிப் பதனிடல் வலயங்கள் ஆகியவற்றின் தேவைக்கான நீர் வழங்கலுக்கு ஏற்புடையதாகும்.

(ii) இக்கட்டணத்தின் கீழ் நீர் வழங்கலுக்கான மாதாந்தக் கட்டணம் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறாகும்.

| அலகுகள் | பாவனைக் கட்டணம் அலகு ரூபா ச. | மாதாந்த சேவைக் கட்டணம் ரூபா ச. |
|---|---|---|
| 00- 25 | 53.00 | 250.00 |
| 26- 50 | 53.00 | 500.00 |
| 51- 75 | 53.00 | 1,000.00 |
| 76- 100 | 53.00 | 1,000.00 |
| 101- 200 | 53.00 | 1,600.00 |
| 201- 500 | 53.00 | 2,500.00 |
| 501- 1000 | 53.00 | 4,000.00 |
| 1001- 2000 | 53.00 | 7,500.00 |
| 2001 - 4000 | 65.00 | 12,500.00 |
| 4001- 1000 | 53.00 | 25,000.00 |
| 10001- 20000 | 53.00 | 50,000.00 |
| 20000க்கு மேல் | 53.00 | 100,000.00 |

### கட்டண விதிப்பு - 8

### கப்பற்றுறை

துறைமுகங்களுக்கு வருகின்ற கப்பல்களின் நீர் வழங்கலுக்கான மாதாந்தக் கட்டணம் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறாகும்.

| அலகுகள் | பாவனைக் கட்டணம் அலகு ரூபா ச. | மாதாந்த சேவைக் கட்டணம் ரூபா ச. |
|---|---|---|
| 00- 25 | 400.00 | 250.00 |
| 26- 50 | 400.00 | 500.00 |
| 51- 75 | 400.00 | 1,000.00 |
| 76- 100 | 400.00 | 1,000.00 |
| 101- 200 | 400.00 | 1,600.00 |
| 201- 500 | 400.00 | 2,500.00 |
| 501- 1000 | 400.00 | 4,000.00 |
| 1001- 2000 | 400.00 | 7,500.00 |
| 2001- 4000 | 400.00 | 12,000.00 |
| 4001- 10000 | 400.00 | 25,500.00 |
| 10001- 20000 | 400.00 | 50,000.00 |
| 20000க்கு மேல் | 400.00 | 100,000.00 |

### கட்டண விதிப்பு - 9

### மொத்த நீர் வழங்கல்

(i) இக்கட்டணமானது உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் சமுதாய அடிப்படையிலான அமைப்புகளால் பேணப்படும் கிராமிய நீர் வழங்கல் திட்டங்களுக்கு வழங்கப்படும் மொத்த நீர் வழங்கலுக்கு ஏற்புடையதாகும்.

(ii) இக்கட்டணத்தின் கீழ் நீர் வழங்கலுக்கான மாதாந்தக் கட்டணம் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறாகும்.

| அலகுகள் | பாவனைக் கட்டணம் அலகு ரூபா ச. | மாதாந்த சேவைக் கட்டணம் ரூபா ச. |
|---|---|---|
| 00- 25 | 16.00 | 250.00 |
| 26- 50 | 16.00 | 500.00 |
| 51- 75 | 16.00 | 1,000.00 |
| 76- 100 | 16.00 | 1,000.00 |
| 101- 200 | 16.00 | 1,600.00 |
| 201- 500 | 16.00 | 2,500.00 |
| 501- 1000 | 16.00 | 4,000.00 |
| 1001- 2000 | 16.00 | 7,500.00 |
| 2001- 4000 | 16.00 | 12,000.00 |
| 4001- 10000 | 16.00 | 25,500.00 |
| 10001- 20000 | 16.00 | 50,000.00 |
| 20000க்கு மேல் | 16.00 | 100,000.00 |

### குறைபாடுள்ள நீர்மானிகள்

ஒரு நீர்மானி பழுதடைந்துள்ளதாகக் காணப்பட்டால் அல்லது அது பழுதுபார்ப்பதற்கு அல்லது மாற்றம் செய்வதற்கு அகற்றப்பட்டால், நீர்மானி இல்லாத காலத்தினுள் பயன்படுத்தப்பட்ட நீர்ப் பாவனையானது, நீர்மானி அகற்றப்பட்டதற்கு அல்லது பழுதடைந்தற்கு நேர்முன்பாகவுள்ள இரண்டு அடுத்தடுத்த நீர்மானி வாசிப்புகளிடையேயுள்ள காலத்தில் பெறப்பட்ட சராசரி நாளாந்த பாவனை வீதத்திற்கு ஏற்ப கணிக்கப்படும்.

**நானாவிதக் கட்டணங்களும் நிபந்தனைகளும் :**

(1) **புதிய சேவை இணைப்புகள் :**
புதிய இணைப்புகளை வழங்குவதற்கான செலவானது பாவனையாளர்களிடமிருந்து அறவிடப்படும்.

(2) **பாவனையாளர்களின் கோரிக்கைகளின் பேரில் நீர்மானியைப் பரீட்சித்தல் :**
பாவனையாளரின் நீர்மானியை அவர்களது கோரிக்கைகளின் பேரில் பரீட்சிப்பதற்கான கட்டணமானது மானியைப் பரீட்சிப்பதற்குச் செலவாகும் செலவின் அடிப்படையில், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பொது முகாமையாளரினால் தீர்மானிக்கப்படும். பரீட்சிப்பின் போது மானியானது உண்மையான பாவனையை விட 2% க்கு மேலதிகமாக/குறைவாக பதிவு செய்வதாயிருப்பது உறுதி செய்யப்படுமிடத்து இக்கட்டணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

(3) **காலதாமதமின்றிச் செய்யப்படும் கொடுப்பனவிற்கு ஊக்குவிப்பு :**
நீர்ப்பட்டியல் திகதியில் இருந்து 14 வேலை நாட்களுக்குள் தங்கள் கொடுப்பனவைச் செய்யும் பாவனையாளர்களுக்கு அப்பட்டியலின் பெறுமதியின் 2% கழிவு கொடுக்கப்படும். பாவனையாளர்கள் நீர்ப்பட்டியலுக்குரிய தொகையைச் செலுத்துவதற்கென முன்கூட்டியே சபையில் பணத்தை வைப்புச் செய்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. நடைமுறையிலிருக்கும் நீர்ப்பட்டியலை ஈடுசெய்வதற்குப் போதியளவு பணம் வைப்பிலிருக்குமிடத்து நீர்ப்பட்டியலின் பெறுமதியில் 4% கழிவு தானாகவே இயைபுடையதாகும்.

(4) **தாமதித்த கொடுப்பனவிற்கு மேலதிகக் கட்டணம் :**

பாவனையாளர்கள் தமது பட்டியல்களை 14 நாட்களுக்குள் செலுத்துதல் வேண்டும். பட்டியல் வழங்கப்பட்டதிலிருந்து 30 நாட்களுக்குள் பாவனையாளர் தமது பட்டியல் தொகையைச் செலுத்தத் தவறுவாராயின், மேலதிகக் கட்டணமாக மாதம் ஒன்றிற்கு நிலுவைப் பணத்தின் 2.5% பட்டியல் வழங்கப்பட்ட திகதியிலிருந்து அறவிடப்படும்.

(5) **சேவை இணைப்பைத் துண்டித்தல் :**

30 நாட்களுக்குள் மேல் பட்டியல் தொகை நிலுவையாக உள்ளவிடத்து பாவனையாளரின் சேவை இணைப்பைத் துண்டிப்பதற்கு தேசிய நீர் வழங்கல் வழகாலமைப்புச் சபையின் பொது முகாமையாளருக்கு அதிகாரம் உண்டு.

(6) **மீள் இணைப்புக் கட்டணம் :**

சேவை துண்டிக்கப்பட்டதன் பின்னர் மீண்டும் இணைப்பை வழங்குவதற்கான கட்டணமானது, அவ்வாறு மீள இணைப்பதற்கு எற்பட்ட செலவைப் பொறுத்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பொது முகாமையாளரால் தீர்மானிக்கப்படும்.

(7) **ஒழுங்குவிதிகளை மீறுதல் :**

நீர் விநியோகம் செய்யப்படும் ஒழுங்குவிதிகள் எதனையும் பாவனையாளர் எவராயினும் மீறுவாராயின் 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தினதும், 1992 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை (திருத்தச்) சட்டத்தினதும் அல்லது இச்சட்டங்களின் ஏனைய தொடர்புடைய திருத்தங்களினதும் ஏற்பாடுகளின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

**குறிப்பு.**- ஒரு அலகு என்பது ஒரு கன மீற்றர் அளவு எனப் பொருள்படும்.

2- 583

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.